தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 4-9-2018

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் "ஒரு மாணாக்கருக்கு ஒரு மரம்" நிகழ்ச்சி

'ஒரு மாணாக்கருக்கு ஒரு மரம்' எனும் நிகழ்ச்சி தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தில் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் மற்றும் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் ஆகியோரால் முதலாம் ஆண்டு மாணவர்களைக் கொண்டு 3-9-2018 (அன்று) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் குறிக்கோளானது ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு மரம் கணக்கில் ஒதுக்கப்பட்டு முதலாம் ஆண்டு முதல் நான்காம் ஆண்டு வரை உள்ள அம்மாணவர்களின் பொறுப்பில் விடப்படும். நிகழ்வின் துவக்க விழாவானது பல்கலைக்கழக வளாகத்தில் சுமார் 4 மணி அளவில் நடைபெற்றது.

தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர். எம். ஜவஹர்லால் அவர்கள் விழாவிற்கு வரவேற்புரையாற்றி மரங்களின் பயன்கள் குறித்தும் விழாவில் நடப்பட்ட மரங்கள் குறித்தும் உரையாற்றினார்.

வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர். ச. மகிமைராஜா அவர்கள் மரங்களின் முக்கியத்துவம் குறித்தும் நல்ல முறையில் மரங்களைப் வளர்க்கும் மாணவர்களுக்கு மாணவர் மற்றும் மரத்தின் நிழற்படத்துடன் கூடிய நற்சான்று வழங்குதல் குறித்தும் பேசினார்.

வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர். கு. ராமசாமி அவர்கள் முதல் மரக்கன்றை நட்டு இந்நிகழ்வைத் துவக்கி வைத்து மரங்களின் சந்தை மதிப்பு குறித்தும் மனித வாழ்வியலில் அவற்றின் பங்கு குறித்தும் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழக உயரதிகாரிகள் பேராசிரியர்கள் மற்றும் முதுகலை மாணவர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியில் மகிழ மரம், பூவரச மரம், வேப்ப மரம், கடம்ப மரம், மஹோகனி, ஆய மரம், பாதாம் மரம், புங்கன் மரம் ஆகியவை நடப்பட்டன.

நடப்பட்ட மரங்கள் அனைத்தும் அவற்றின் இருப்பிடம் மற்றும் வளரியல்பு பண்புகள் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியின் மூலம் இப்பல்கலைக்கழக வளாகத்தில் நுண்பருவ சூழ்நிலை மாறுபாடு மற்றும் சுற்றுச்சூழல் பசுமையடைவதோடு மட்டுமல்லாமல் இளைஞர்களின் மனதில் மரங்களின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வும் ஏற்படும் என நம்பப்படுகிறது.

மொத்தமாக 1000 மரக்கன்றுகள் இப்பல்கலைக்கழகத்தின் பல்வேறு இடங்களான ஆராய்ச்சி நிலைய கட்டிடம், அண்ணா அரங்கத்தை சுற்றியுள்ள இடங்கள், பல்வேறு துறைகள், விருந்தினர் மாளிகை, நூற்றாண்டு விழா கட்டிடம் மற்றும் தாவரவியல் பூங்காவை சுற்றியுள்ள பல்வேறு இடங்களில் நடப்பட்டது.

மலரியல் மற்றும் நிலஎழிலூட்டும் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர். சீ. சுப்ரமணியன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்